பக்கங்கள் 17

# காலை முரசு

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 கார்த்திகை 16 ஞாயிற்றுக்கிழமை 01.12.2024 அதிர்வு 121

## பேரிடரால் உயிரிழப்பு எண்ணிக்கை உயர்வு

இலங்கையில் சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் உயிரிழந் தோரின் எண்ணிக்கை 17 ஆக உயர் வடைந்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ 04



### நினைவேந்தல் உரிமையை நிராகரித்து

# மீண்டும் இனவாதத்தை தூண்ட முயலாதீர்கள்!

### விமல், கம்மன்பில, வீரசேகரவுக்கு அநுர அரசு தக்க பதிலடி

"போரில் உயிரிழந்த தங்கள் உறவுகளைத் தமிழ் மக்கள் நினைவேந்துவது அடிப்படை மனித உரிமையாகும். அதனை எவரும் நிராகரிக்க முடியாது. அவ்வாறு நிராகரித்து மீண்டும் இனவாதத்தைத் தூண்ட முயல வேண்டாம்."

- இவ்வாறு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். 04

## மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பில் சிறீதரனுடன் கலந்துரையாடிய சுவிஸ் அதிகாரிகள்

இலங்கைக்கான சுவிஸ் தூதரக மற்றும் குடிவரவு – குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை நேரில் சந்தித்துக் கலந்துரையாடி யுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள சிறீதரன் எம்.பியின் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, இலங்கை யிலிருந்து சுவிஸ் நாட்டுக்குப் 04



நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் சுமந் திரன் வெற்றி பெறாவிட்டாலும் தமிழர் அரசிய லில் தவிர்க்க முடியாத ஒரு பங்காளியாக – பாத்திரவாளியாக – அவர் தொடர்கின்றார்.

யாழ் மாவட்டத்திலிருந்து நாடாளுமன் றத்திற்கு இம்முறை தெரிவு செய்யப்படாதவர். ஆயினும் அவர் தமது மாவட்டத்தில் அதிக நேரத்தைச் செலவிட்டு வருகிறார்.

தமக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற தொடர் என்ற பெயரில் தொடர்ந்து அவர் மக்களை ஆங்காங்கே சந்தித்து வருகிறார். அரசியலில் தாம் ஒதுங்கப் போவதில்லை என்ற செய்தியை இதன் மூலம் அவர் கோடி காட்டுகிறார் எனக் கருதலாம்.

அதுவல்ல விடயம். அவர் மக்களை சந்திக்கும் அதே நேரத்தில் அரசியலில் அவரை எதிர்த்து நின்ற பலதரப்புகளும் இப்போது அவரைத் தேடிச் சென்று சந் திக்கின்றன. 04





# ஃபெங்கல் புயல் மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து கரையைக் கடக்கும்

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள ஃபெங்கல் என பெயரிடப்பட்டுள்ள புயல் எதிர்வரும் மணித்தியாலங்களில் மேற்கு அல்லது வடமேற்கு திசையில் நகர்ந்து வட தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கு இடையேயான கரையை கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று மாலை வெளியிட்ட புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த புயலானது இன்று மதியம் 2.30 அளவில் திருகோணமலைக்கு வடக்கே 420 கிலோமீற்றர் தொலைவிலும் காங்கேசன்துறைக்கு வடக்கே 280 கிலோமீற்றர் தொலைவிலும் நிலைகொண்டிருந்தாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புயல் இந்தியாவுக்குள் நுழையும் போது அது படிப்படியாக வலுவிழக்கும் என்பதுடன், இதனால் இலங்கையின் வானிலையில் ஏற்படும் தாக்கமும் குறைவடையும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அதன்படி, நாட்டின் பல பகுதிகளில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும் எனவும் வட மாகாணத்தின் சில பகுதிகளில் 50 மில்லி மீற்றருக்கு அதிகளவிலான மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேல், சப்ரகமுவ, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடைக்கிடையே மழை பெய்யக் கூடும்.

அத்துடன், வடக்கு, வடமத்திய, வடமேல், மேல், மத்திய மற்றும் தென் மாகாணங்களில் இடைக்கிடையே மணித்தியாலத்துக்கு 55 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.



# அரிசி இறக்குமதி செய்யத் தயார் இறக்குமதியாளர்கள் அறிவிப்பு

நாடு அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக அரிசியை இறக்குமதி செய்வதற்கு தாங்கள் தயாராக உள்ளதாக இறக்குமதியாளர்கள் அரசாங்கத்துக்கு அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அண்மையில் வர்த்தக, வாணிப, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்கவுடன் இறக்குமதியாளர்கள் கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தியிருந்தனர்.

அதன்போது ஒரு கிலோ அரிசிக்கான இறக்குமதி வரியை 65 ரூபாவிலிருந்து 40 ரூபாவாக குறைக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரிசி இறக்குமதிக்குச் சந்தர்ப்பம் வழங்கினால் 15 நாள்களுக்குள் சந்தையில் நாட்டு அரிசிக்கான தட்டுப்பாட்டைக் குறைக்க முடியும் என இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அத்துடன், விவசாயிகளிடம் கொள்வனவு செய்வதற்குப் போதியளவு நெல் கையிருப்பில் இல்லை எனவும் இறக்குமதியாளர்கள் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்தநிலையில், அரிசி இறக்குமதிக் கான விலை மனு கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாடு திரும்பும் எண்ணம் பஸிலுக்கு இல்லையாம்

## உள்ளூராட்சி தேர்தலையும் நாமலே வழிநடத்துவாராம்



உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போதும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை நாமல் ராஜபக்ஷவே வழி நடத்துவார் என்று அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முதல் நாள் அமெரிக்கா பறந்த மொட்டுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் பஸில் ராஜபக்ஷ, நாடாளுமன்றத் தேர்தலின்போதுகூட நாடு திரும்பவில்லை.

இதனால் நாடாளுமன்றத் தேர்தலை நாமல் ராஜபக்ஷ வே வழிநடத்தினார். ஓரிரு கூட்டங்களில் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்றிருந்தார்.

இந்நிலையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை வழிநடத்த பஸில் வரவேண்டும் எனக் கட்சியின் செயற்பட்டாளர்கள் சிலர் கோரி இருந்தாலும், அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பும் எண்ணம் இல்லை என்று பஸில் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை கட்சியின் தேசிய அமைப் பாளரான நாமல் ராஜபக்ஷவே வழிநடத்துவார் எனவும், இரண்டாம் தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கான ஒத்திகை களமாக உள்ளூராட்சி சபைத் தேர்தல் பயன்படுத்தப்படவுள்ளது எனவும் பஸில் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பருத்தித்துறை - கொட்டடி பகுதிக்கு கடற்றொழில் அமைச்சர் விஜயம்

பருத்தித்துறை – கொட்டடி பகுதி மீனவர்களது அழைப்பை ஏற்று நேற்று சனிக்கிழமை மாலை சென்ற கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரம் அப்பகுதி மீனவர்களுடன் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது இந்திய மீனவர்களது எல்லைதாண்டிய மீன்பிடி நடவடிக்கை தொடர்ந்து வருகின்றமை காரணமாக வடக்கு மீனவர்கள் பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் எனவும் அதனை தடுத்து நிறுத்த இலங்கை கடற்படையினர் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

அத்துடன், சுருக்கு வலை உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட தொழில்களையும் முற்றாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

மீனவர்களது கோரிக்கையினை செவிமடுத்த கடற்றொழில் அமைச்சர் முன்னைய ஆட்சி காலத்தை போலல்லாது கடற்படையினர் ஊடாக இந்திய மீனவர்களது வருகையை தடுத்த நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதிமொழியினை வழங்கியிருந்தார்.

தொடர்ந்து சீரற்ற காலநிலை காரணமாக அப்பகுதியில் மழை வெள்ள பாதிப்பிற்குள்ளான வீடுகளை நேரில் சென்று பார்வையிட்டு சென்றிருந்தார்.





# வெள்ள அபாய எச்சரிக்கை 24 மணித்தியாலங்கள் நீடிப்பு

தெதுரு ஓயா மற்றும் மகாவலி கங்கையை அண்மித்த தாழ்வான பகுதிகளுக்கு விடுக்கப்பட்ட வெள்ள அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை அமுலில் இருக்கும் என நீர்ப்பாசன திணைக்களம் நேற்று மாலை அறிவித்தது.

தெதுரு ஓயா மற்றும் மகாவலி கங்கையை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களும், அப்பகுதியின் ஊடாக வீதிகளில் பயணிக்கும் வாகன சாரதிகளும் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வகையில் அவரை எதிர்த்து தேர்தலில் போட்டியிட்ட தமிழ் மக்கள் கூட்டணியின் வேட்பாளர் மணிவண்ணன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக விளங்கிய மாவை சேனாதி ராஜாவின் மகன் அமுதன் போன்றோர் அவரைத் தனிமையில் சந்தித்து நீண்ட நேரம் உரையாடி இருக்கிறார்கள் எனத் தெரிகிறது. அவரோடு சேர்ந்து அரசியல் செய்வது பற்றி இந்தப் பேச்சுக்களில் ஆராயப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

கட்சி அரசியல் பற்றி கட்சி மட்டத்தில் பேசுவோம், இப்போது சேர்ந்து மக்களை சந்திக்கலாம் வாருங்கள் என்ற சாரப்பட சுமந்திரன் இருவருக்கும் பதிலளித்தார் என சம்பந்தப்பட்ட வட்டாரம் ஒன்று தெரி வித்தது.

தேர்தல் முடிவுகள், புதிய கூட்டுக் களுக்கு – அணிசேரல்களுக்கு – வழி வகுத்தாலும் வகுக்கலாம். பொறுத் திருந்து பார்ப்போம்.

✦✦✦

தமிழரசுக் கட்சியில் இருந்து கொண்டு கட்சியின் வேட்பாளர்களை எதிர்த்து நாடாளுமன்றத் தேர்தலில் களம் இறங்கியவர்களும், கட்சிக்கு எதிராக வேலை செய்தவர்களும் இப்போது கட்சியிலிருந்து இடைநிறுத்தப்படும் அல்லது வெளியேற்றப்படும் ஆபத்தை எதிர்கொண்டு இருக்கிறார்கள் என்பது தெரிந்ததே.

அதற்கிடையில் கட்சியில் இதுவரை அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப் புகளும் கைநழுவிப் போகின்ற நிலைமை காணப்படுகின்றது.

அண்மையில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் மாவீரர் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு ஒன்றில் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பங்கு பற்றினார். இவர் ஏன் இங்கு வருகிறார் என்று இதுவரை காலமும் வட்டுக்கோட்டைத் தொகுதியைத் தன்னுடையதாக நினைத் துச் செயற்பட்ட அரசியல்வாதி முனகி னார் என்று கேள்வி.

கட்சிக்கு எதிராகக் களமிறங்கிய நிலையில் தொகுதிப் பொறுப்பாளர் பதவியும் தம் கைவிட்டு போய்விட்டது என்ற நிஜத்தை உணர அல்லது ஏற்றுக் கொள்ள அவருக்கு வலிக்கிறது போலும். என்ன செய்ய முடியும்?

ஏற்கனவே கட்சியின் மகளிர் பிரிவு அணி ஒன்றின் தெரிவு அவர் கையைத் தாண்டி நடந்து விட்டதாகத் தகவல் உண்டு.

யாழ் மாவட்டத்தில் தமிழரசுக்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிதான். அதன்படி பார்த்தால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள சகல தொகுதிகளும் அந்த ஒரு எம். பியின் கண்காணிப்பின் கீழ்தான் வர வேண்டிய நிலைமை. அதுதான் யதார்த் தம். பழைய பொறுப்பைக் கோருதல் இனியும் எடுபடச் சாத்தியமில்லை.

கட்சி கூடி, தொகுதி அமைப்பாளர்கள், பொறுப்பாளர்களைப் புதிதாக ஒழுங்க மைக்க வேண்டிய தேவையும் எழுந்திருப் பதாகத் தோன்றுகின்றது. தலைமையிலி ருந்து எல்லாமுமே புதுக் கைகளுக்கு மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

### மீண்டும்...

'வடக்கு, கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வு என்ற பெயரில் மரணித்த விடுதலைப்புலிகளைத் தமிழ் மக்கள் பகிரங்கமாக நினைவுகூர்ந்துள்ளார்கள். எனவே, அங்கு இனிமேல் எந்தவொரு நினைவேந்தல் நிகழ்வுக்கும் அநுர அரசு அனுமதி வழங்கக்கூடாது. மாவீரர் தினத்தை நினைவேந்தியவர்களை அநுர அரசு உடன் கைது செய்ய வேண் டும்.' – என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் சரத் வீரசேகர ஆகியோர் தெரிவித்திருந்தனர். அவர் களின் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் விஜித ஹேரத் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

"கடந்த காலங்களில், போரில் உயிரி ழந்த தமது உறவுகளை வடக்கில் உள்ள உறவுகள் நினைவேந்தும்போது அதற்கு எதிராக தெற்கில் உள்ள சிலர் இனவாதம் கக்கினார்கள். அதேபோல் போரில் உயிரி ழந்த தமது உறவுகளை தெற்கில் உள்ள உறவுகள் நினைவேந்தும்போது அதற்கு எதிராக வடக்கில் உள்ள சிலர் இனவாதம் கக்கினார்கள். ஒவ்வொரு வருடமும் மே, நவம்பர் மாதங்களில் இத்தகைய இன வாதக் கருத்துக்கள் வெளிவந்திருந்தன. இந்த இனவாதக் கருத்துக்கள் இனியும் இருக்கக்கூடாது.

நினைவேந்தல் உரிமை சகல இனத்த வர்களுக்கும் உரியது. அதில் இன வேறு பாடு இருக்கக்கூடாது.

இலங்கையில் நினைவேந்தல் நிகழ் வைப் பயங்கரவாதக் கண்ணோட்டத்துடன் எவரும் பார்க்கக்கூடாது.

நாட்டில் அமுலில் உள்ள சட்டங்களுக் குக் கட்டுப்பட்டு அமைதியான முறையில் நினைவேந்தல் நிகழ்வுகளை எவரும் நடத்தலாம். அதை நாம் தடுத்து நிறுத்த முடியாது. அதேவேளை, சட்டங்களை மீறிச் செயற்படுபவர்கள் கைது செய்யப் படுவார்கள். அது பொலிஸாரின் கடமையாகும்." – என்றார்.

### மாவீரர் தின...

புலம்பெயர்ந்த தமிழர்களின் புகலிடக் கோரிக்கைகள் தொடர்பில் சுவிஸ் அரசின் நிலைப்பாடு தொடர்பிலும், இந்த ஆண்டுக்கான தமிழ்த் தேசிய மாவீரர் தின நினைவேந்தல் நிகழ்வுகள் உள் ளிட்ட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### பேரிடரால்...

நிலையம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதேநேரம், சீரற்ற காலநிலையை யடுத்து, ஏற்பட்ட அனர்த்தங்களால் 20 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன், ஒரு இலட்சத்து 42 ஆயி ரத்து 624 குடும்பங்களைச் சேர்ந்த 4 இலட்சத்து 79 ஆயிரத்து 871 பேர் பாதிக கப்பட்டுள்ளனர்.

அவர்களில் 8 ஆயிரத்து 470 குடும்பங்களைச் சேர்ந்த 27 ஆயிரத்து 517 பேர் இடைத்தங்கல் முகாம்களிலும், 45 ஆயிரத்து 418 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 16 ஆயிரத்து 209 பேர் உறவினர் வீடுகளிலும் தங்கி யிருக்கின்றனர் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதேநேரம், சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் 103 வீடுகள் முழுமையாகவும், 2 ஆயிரத்து 635 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந் துள்ளன.

# காற்றின் தரம் பாதிப்பை ஏற்படுத்தும் அளவுக்கு உயர்வடையும் சாத்தியம்

நிலவும் சீரற்ற வானிலையால் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் காற்றின் தரம் பாதிப்பை ஏற்படுத்தும் அளவுக்கு உயர்வடையும் சாத்தியம் காணப்படுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய நகரங்களில் காற்றின் தரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களில் காற்றின் தரம் மத்திய தரத்தில் காணப்படுகின்றது.

சாதாரணமாக காற்றின் தரம் 50 புள்ளிகளுக்கு குறைவாகக் காணப்பட வேண்டுமென தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

எனினும், யாழ். மாவட்டத்தில் காற்றின் தரம் 130 புள்ளிகளாகவும் கொழும்பு நகரில் காற்றின் தரம் 120



புள்ளிகளாகவும் பதிவாகியுள்ளது.

இந்த நிலைமையின் காரணமாக சுவாசக் கோளாறுகள் காணப்படுமாயின் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி அஜித் குணவர்தன மக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.




# நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலை மாற்றம்

எரிபொருள் விலைகளில் நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


ஒக்டேன் 92 ரக பெட்ரோல் ஒரு லீற்றர் 2 ரூபாவால் குறைக்கப்படுவதுடன் அதன் புதிய வலை 309 ரூபா என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ஒட்டோ டீசல் ஒரு லீற்றர் 3 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதன்படி ஒட்டோ டீசல் ஒரு லீற்றரின் புதிய விலை 286 ரூபாவாகும்.

மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு அதன் புதிய விலை 188 ரூபாவாக பதிவாகியுள்ளது.

எவ்வாறாயினும், சுப்பர் டீசல் மற்றும் ஒக்டேன் 95 ரக பெட்ரோலின் விலைகளில் மாற்றமில்லை என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.



# பதுளை - பண்டாரவளை இடையிலான ரயில் சேவை இன்று மீண்டும் ஆரம்பம்

பதுளை – பண்டாரவளை இடையிலான ரயில் சேவையை இன்று பிற்பகல் முதல் மீண்டும் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் மார்க்கத்தில் காணப்படும் மண் மற்றும் கற்களை அகற்றும் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்றுவருவதாக ரயில்வே திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்காக பல குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என திணைக்களம் கூறியுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் பேரினவாத வெறி!

காலனித்துவ ஆட்சியாளர்களிடம் இருந்து இலங்கை சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் இந்த 76 ஆண்டுகளாக நாட்டின் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்படாத ஒரு பிணியாகத் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த இனப் பிரச்சினை தீர்வு முயற்சியில் ஒரு விடயம் தொடர்ச்சியாக - கிரமமாக - மாறி மாறி இடம் பெற்று வருவதை நாம் காணமுடியும்.

அது, ஆட்சியில் இருக்கும் பௌத்த - சிங்கள பேரினவாதத் தரப்பு ஏதும் நாட்டின் நலன் கருதி தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சி எதனையும் ஆக்கபூர்வமாகவோ அல்லது பெயரளவிலோ முன்னெடுக்கும் போதெல்லாம், எதிரணியில் இருக்கும் பிரதான பௌத்த - சிங்கள கட்சிகள் பேரினவாதத்தைக் கிளப்பி, அந்த முயற்சியின் ஊடாக அரசியல் லாபமும் ஆட்சி அதிகாரமும் பெறுவதற்கு முயற்சிப்பதுதான் அது.

சுதந்திர இலங்கையின் சரித்திரத்தில் இந்த பண்பியல்பு மாற்ற முடியாத ஒரு விவகாரமாக நீளுகின்றது.

இப்போது அதிகாரத்துக்கு வந்திருக்கும் இடதுசாரிகள், ஆட்சிக்கு வர முன்னரே தீர்வு முயற்சி குறித்து கோடி கட்டி வந்துள்ளார்கள்.

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வில் முக்கிய விடயம் பிரதான இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாகும். தேசிய இனப் பிரச்சினையை ஒட்டி பெரும் யுத்தத்தில் மோதிய இனங்கள் இப்போது சுமுகமாக பிரச்சினையைத் தீர்ப்பதாயின் அவற்றுக்கிடையே நல்லிணக்கம் ஏற்படுவது அத்தியாவசியமாகும்.

யுத்தத்தில் காவு கொடுத்த தங்கள் உறவுகளை நினைவேந்துவது அந்தந்த இனத்தவரின் உரித்து. நல்லிணக்கத்தை உருவாக்கும் முயற்சியில் நினைவேந்தல் உரித்தை உறுதிப்படுத்துவது அடிப்படையானதும் முக்கியமானதுமாகும்.

தற்போதைய புதிய அரசு, தமிழர் தரப்பின் அந்த உரித்தை இம்முறை ஓரளவுக்கேனும் மதித்து நடந்து கொள்ள, அதைப் பயன்படுத்தி பேரினவாதத்தைக் கிளப்ப தொடங்கி இருக்கின்றனர் பேரினவாத மேலாண்மை போக்குடைய பெருந்தேசியவாத அரசியல்வாதிகள்.

அந்த வகையில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ இவ்விடயத்தைப் பெரிய விவகாரமாக்கி சீறியிருக்கின்றார்.

இத்தகைய விடயங்களில் அவர் புதியவர் அல்லர். இப்போது ஆட்சி அமைத்திருக்கும் இதே ஜே.வி.பியினர் உட்பட்ட தரப்பில் இருந்துதான் இவ்விடயங்களை ஒட்டி அவரும் செயலாற்றியவர்.

எண்பதுகளின் பிற்பகுதியிலும் மிலேனியத்தின் ஆரம்பத்திலும் தமிழர் தரப்போடு தேசிய இனப் பிரச்சினைக்கு சமரசத் தீர்வு காணும் முயற்சிகள் எடுக்கப்பட்ட போது, பேரினவாதத்தைக் கிளப்பி அந்த முயற்சிகளை முறியடிப்பதில் காத்திரமாகப் பங்காற்றியவர்கள் இப்போதைய ஜனாதிபதியையும் உள்ளடக்கிய ஜே.வி.பியினர்தான்.

மிலேனியம் பிறந்த போது, 2002 - 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தமிழர் தரப்போடு தென்னிலங்கை அரசு முன்னெடுத்த சமரச முயற்சியை இதே ஜே.வி.பியினர்தான் கடுமையாக எதிர்த்து அதனை முன்னெடுக்க விடாமல் முறியடிப்புச் செய்தனர். அந்த ஜே.வி.பி. அணியில் முக்கிய பங்காற்றியவர் விமல் வீரவன்ஸ.

அதே ஜே.வி.பியின் பெரும் பகுதியினர் இப்போது ஆட்சியாளர்களாக மாறி, இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிச் சிந்திக்கத் தலைப்படும்போது கடந்த தசாப்தம் வரை அவர்களோடு பயணித்து, அரசியல் செய்த விமல் வீரவன்ஸ இப்போதும் தமது இனவாதக் கைவரிசையைக் காட்டத் தொடங்கி இருக்கிறார். அதே வேலையை போன தசாப்தத்தில் அவரோடு இணைந்து முன்னெடுத்த இப்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிற்கும் அவரது ஆட்சி பீடத்துக்கும் விமல் வீரவன்ஸவின் இந்த நிலைப்பாடு புதியதாக இருக்காது. முன்னர் அவர்கள் ஒன்று சேர்ந்து கிளப்பிய இனவாததை, இப்போது அவர்களை விட்டுவிட்டு விமல் வீரவனஸ தாம் தனித்து முன்னெடுத்துக் காட்டுகிறார். அவ்வளவுதான்.

அவரோடு சரத் வீரசேகர, உதய கம்மன்பில்ல, நவீன் திஸநாயக்கா ஆகியோரும் பேரினவாதக் கூக்குரலை எழுப்பத் தொடங்கியிருக்கின்றனர்.

# 2 லட்சம் ஏக்கருக்கு அதிகமான விவசாய நிலங்கள் பாதிப்பு



ராஜாங்கனை நீர்த்தேக்கத்தில் திறக்கப்பட்டுள்ள வான்கதவுகளின் எண்ணிக்கை இரண்டாக மட்டுப்படுத் தப்பட்டுள்ளது.

அந்த நீர்த்தேக்கத்தில் நீரின் அளவு குறைந்து வருவதன் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அங்கமுவ ஓயாவின் அனைத்து வான்கதவுகளும் மூடப்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மழை காரணமாக மட்டக்களப்பு, பொலனறுவை, அம்பாறை மற்றும் அநுராதபுரம் ஆகிய மாவட்டங் களில் விவசாய நிலங்கள் பாரியளவு பாதிப்படைந்துள்ளன என குறிப்பிடப் பட்டுள்ளது.

இதன்படி, 2 லட்சத்துக்கும் அதிக ஏக்கர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட் டுள்ளன என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.






கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலகத்துக்குட்பட்ட தட்டுவன்கொட்டி கிராமத்தில் இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேரில் சென்று பார்வையிட்டார்.

# சீரற்ற காலநிலை காரணமாக சிறுவர்களிடையே நோய் பரவல்


நாட்டின் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக தற்போது சிறுவர்களிடையே நோய்கள் அதி கரித்துள்ளன என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி கிஷாந்த தசநாயக்க தெரிவித்துள்ளார்.

மழை காரணமாகச் சிறுவர்களி டையே சளி, டெங்கு உள்ளிட்ட நோய் கள் தற்போது அதிகரித்து வருகின்றன.

சிறுவர்கள் மழைக் காலத்தில் விளையாடுவதால் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக, பெற்றோர்கள் மழையிலிருந்து அவர்களைப் பாது காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கொழும்பு தேசிய வைத்திய சாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி கிஷாந்த தசநாயக்க தெரிவித்துள்ளார்.






# உலக எய்ட்ஸ் தினம் இன்று டிச. 01 வரும் முன்காப்பதே சாலச்சிறந்தது!

■ நடராஜன் ஹரன்

சின்ன குழந்தை கூட இன்று எய்ட்ஸ் என்ற வார்த்தையை கற்று வைக்கும் அளவிற்கு இன்று உலகம் முழுவதும் அது பிரபலமாகி இருக்கிறது. பத்திரிக்கைகள், டி.வி, சினிமா, அரசாங்க அலுவலகங்களில், நடைபாதையில் எங்கு பார்த்தாலும் எய்ட்ஸ் பற்றிய விளம்பரங்களை நாம் பார்க்கலாம். அந்த அளவிற்கு இந்த உலகையே ஆட்டி படைக்கும் பேயாக இந்த எய்ட்ஸ் விளங்குகிறது.

எய்ட்ஸ் என்றால் என்ன என்பது தெரியவில்லை என்பது வருந்தத்தக்க விடயமாகும். எய்ட்ஸ் பிரச்சினைக்குரிய , உயிரை குடிக்க கூடிய நோய் என்று எல்லோரும் தெரிந்து இருக்கிறார்கள். ஆனால் , அந்நோய் எவ்வாறு ஒருவரை தாக்கும் என்பதில் அதிக விழிப்புணர்வு அற்று இருக்கிறார்கள்.

ஒவ்வொரு வருட டிசம்பர் முதலாம் திகதி ‘உலக எய்ட்ஸ் தினம்’ ஆகக் கடைபிடிக்கப்படுகிறது.

எய்ட்ஸ்க்கு சிகிச்சை உண்டா? இல்லையா?

மருந்து உண்டு என்ற போலி விளம்பரத்தால் சொத்தை அழிக்காதீர்கள். ஆனால் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

**எய்ட்ஸ் என்றால் என்ன?**

பல்வேறு நோய்கள் தாக்கப்பட்ட ஒருவருக்கு, அவருடைய உடலின் நோய் எதிர்ப்பு சக்தி குறையத் தொடங்கியிருப்பதை மருத்துவ பரிசோதனை உறுதி செய்யும் பரிதாபகரமான நிலைதான் எய்ட்ஸ்.

எச்.ஐ.வி. எனும் வைரசால்தான் எய்ட்ஸ் ஏற்படுகிறது. இது மனிதர்களின் இயற்கையான நோய் எதிர்ப்புத் தன்மையில் நிரந்தரப் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

ஒருவர் எச்.ஐ.வியுடன் பல ஆண்டுகாலம் வாழ முடியும். ஆனால், அவர் உடல் நோய்களை ஏதிர்க்கும் சக்தியை இழக்கும் தன்மையைப் பெறும் போதுதான் எய்ட்ஸ் நோயாளியாகிறார். ஓர் ஆண்டுக்குள் அவருக்கு ஏராளமான நோய்கள் ஒன்றன் பின் ஒன்றாக தொற்றிக் கொள்ளும் நிலை அவருக்கு ஏற்படுகிறது.

**எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸுக்கும் உள்ள வேறுபாடு என்ன?**

எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எச்.ஐ.வி. இருக்கும். ஆனால் எச்.ஐ.வி. தாக்கப்பட்ட அனைவரும் எய்ட்ஸ் நோயாளி என்று கூறிவிட முடியாது. ஆனால், எச்.ஐ.வி. தொற்று உள்ளவர்கள் அனைவரும் எய்ட்ஸ் நோயாளியாக மாறுகிறார்கள். எச்.ஐ.வி. பாதுகாப்பற்ற உடலுறவு, பரிசோதனை செய்யப்படாத ரத்தம் ஏற்றுதல் மற்றும் எய்ட்ஸ் நோயாளி தாயிடமிருந்து குழந்தைகளுக்கு ஆகிய மூன்று முக்கிய வழிகளில் தற்போது பரவிவருகிறது.

எச்.ஐ.வியால் தாக்கப்பட்டவர் 3 ஆண்டுகளிலிருந்து 10 ஆண்டு வரை அந்நோய்க்கான அறிகுறிகள் பற்றி தெரியாமலேயே வாழ்வார். அதே சமயம் அவர் எய்ட்ஸ் நோய்க்குரிய அறிகுறிகள் தென்படும்போதுதான் அவருக்குள் மறைந்திருந்த ஆபத்தை உணர முடியும்.

**யாருக்கு எய்ட்ஸ் வரும்?**

உலகில் எய்ட்ஸ் ராக்கெட் வேகத்தில் பரவிவருகிறது. எச்.ஐ.வி. தொற்று உள்ளவருடன் பாதுகாப்பற்ற உடல் உறவு கொள்வோருக்கு இந்த எச்.ஐ.வி. தொற்றி விடுகிறது.

80 சதவீத எய்ட்ஸுக்கு காரணம் பாதுகாப்பற்ற உடல் உறவுதான். 25 வயதுக்குள் உள்ள இளைஞர்களுக்குத்தான் எய்ட்ஸ் அதிகமாக பரவுகிறது. அதற்கு காரணம் அந்த வயதில் அவர்கள் பாலுறவில் அதிக நாட்டமிக்கவராக இருப்பதால் பாதுகாப்பான உடல் உறவை மறந்து விடுகிறார்கள். “நீங்கள் எப்படி பட்டவராக இருந்தாலும், எங்கு வாழ்கிறவராக இருந்தாலும் எச்.ஐ.வி தொற்று பற்றிய விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்’ என்று தேசிய எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நிறுவனம் மற்றும் யுனிசெவ் கூட்டாக வெளியிட்டுள்ள கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எச்.ஐ.வி தொற்றுக்கு ஏதாவது அறிகுறி உள்ளதா?**

எச்.ஐ.வி தொற்றியவுடன் எந்த அறிகுறியும் இருக்காது. அவர் மற்றவர்களைப் போலவே சாதாரணமாகவே தனது வாழ்க்கையின் கடமைகள் அத்தனையும் நிறைவேற்றிக் கொண்டிருப்பார். இந்த காலகட்டத்தில் சிறுசிறு நோய்கள் (நோய் தாக்குதல்களுக்கு ஆளாகாதோரைப் போலவே) வந்து போகும்.

இது எல்லோருக்கும் வரும் நோய்தானே என்பதால் எச்.ஐ.வியால் தாக்கப்பட்டவருக்கு தான் இந்நோயால் தாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறிய மாட்டார்.

எச்.ஐ.வியால் தாக்கப்பட்டிருப்பதை ரத்தப் பரிசோதனை மூலம்தான் உறுதி செய்ய முடியும். (சந்தேகம் உள்ளவர்களுக்கு இலவச ஆலோசனை பெறலாம் .)

**எய்ட்ஸ் எப்படி பரவுகிறது?**

எய்ட்ஸ் பரவ காரணமான எச்.ஐ.வி. கிருமி மூன்று வழிகளில் பரவுகிறது. என்றாலும் கூட, பாதுகாப்பற்ற உடல் உறவுதான் இன்று இந்த உலகில் ஏராளமானோருக்கு நோய்த் தொற்றை ஏற்படுத்தியிருக்கிறது.

தொடர்ச்சி▼

# உலக எய்ட்ஸ் தினம் இன்று டிச. 01
# வரும் முன்காப்பதே சாலச்சிறந்தது!

**தொடர்ச்சி▼**

1. பாதுகாப்பற்ற உடல் உறவு (ஆசன வாய் மற்றும் பெண் உறுப்பு வழியாக புணர்தல்).

2.பரிசோதனை செய்யப்படாத எச்.ஐ.வி தொற்றுள்ள ரத்தத்தை ஏற்றுவது. பயன்படுத்திய ஊசிகளை மீண்டும் பயன்படுத்தும் போது.

3.கருவுறும் முன் அல்லது கருவுற்ற நிலையில் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகும் பெண்ணின் சிசுவுக்கு எச்.ஐ.வி. தொற்று பரவ வாய்ப்பு.

**பால்வினை நோய்கள் என்றால் என்ன?**

பால்வினை நோய் தொற்றியவருடன் உடல் உறவு கொள்ளும் போது பரவுவதுதான் பால்வினை நோய்கள் (எஸ்.டி.டி). பால்வினை நோய்களில் குனோரியா எனப்படும் வெட்டை நோய், சிபிலிஸ் எனும் மேக நோய், படை உள்ளிட்ட நோய்கள்தான் அவை. இவற்றை கண்டறிந்து குணப்படுத்த முடியும்.

இந்த நோய்களை கண்டறியாமல் விடும் போது எளிதில் எச்.ஐ.வி தொற்றுக்கு ஆளாகவேண்டிய நிலை ஏற்படலாம். பால்வினை நோய்கள் இனப்பெருக்க உறுப்புகளில் புண்கள் குறிப்பாக பெண்களுக்கு, ரத்தக்கசிவு உள்ள படை, தோல் கீறல்களால் எச்.ஐ.வி. நுழைய கதவுகளை திறக்கின்றன.

**எய்ட்ஸ் எப்படி பரவாது?**

1. சாதாரணமாக சமூக பழக்கவழக்கங்களின் மூலம் பரவாது.

2.கைகுலுக்குதல், தொடுதல், கட்டியணைத்தல் மற்றும் முத்தம் மூலம் பரவாது.

3.பொதுக்கழிப்பறைகள் மற்றும் படுக்கை மற்றும் அவர்கள் பயன்படுத்திய உணவுப் பாத்திரங்கள் மூலம் பரவாது.

4.நீச்சல் குளம் மூலம் மற்றும் சலுன் கடைகள் மூலம் பரவாது.

5.ஒவ்வொரு முறையும் துய்மையாக்கப்பட்ட உபகரணங்கள் மூலம் ரத்த தானம்.

6.இருமல், தும்மல் மற்றும் கொசுக்கடி மூலம் பரவாது.

**எய்ட்ஸ் பரவாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?**

இதுவரை எய்ட்ஸை குணமாக்க எந்த மருந்தும் கண்டறியாத போது, நாம் கவனமுடன் நடந்து கொள்வதன் மூலம்தான் அதை தடுக்க முடியும். பொறுப்புடனும் பாதுகாப்புடனும் நடந்து கொண்டால் இந்த நோயை விரட்ட முடியும்.

எய்ஸ்லால் பாதிக்கப்பட்டவர் அதுபற்றி தெரியாமலே அந்நோயை பரப்பிக் கொண்டிருப்பதால் நாம் மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

பள்ளிகளில் எய்ட்ஸ் பற்றி பேச எல்லோராலும் முடிவதில்லை. எய்ட்ஸ் பற்றி எல்லோருடனும் பேசுங்கள். உங்களுக்கு தெரிந்தவை பற்றி குடும்பத்தினர் மற்றும் நண்பர்களுடன் கலந்து பேசுங்கள்.

ழ எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும்.

ழ உங்களுக்கு இருக்கும் சந்தேகங்களை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

ழ நீங்கள் பெற்ற தகவல்களை மற்றவர்களுக்கும் சொல்லுங்கள்.

**எச்.ஐ.வி யை விலை கொடுத்து வாங்கலாமா?**

✦ பாதுகாப்பற்ற முறையில் ஒருவர் பலருடன் உடலுறவு கொள்தல்.

✦ பலருடன் உறவு கொள்பவருடன் பாதுகாப்பற்ற உடலுறவு.

✦ பயன்படுத்திய ஊசிகளை சுத்தப்படுத்தாமல் மீண்டும் பயன்படுத்துவது.

✦ பரிசோதனை செய்யாத ரத்தத்தை பெற்றுக் கொள்தல்.

பொறுப்பான உடலுறவு பழக்கங்கள்:-

1.திருமணத்துக்கு முன்பு உடலுறவு கொள்வதை தவிர்த்து விடுங்கள். அன்பையும் காதலையும் உணர்த்த உடலுறவு தான் ஒரே வழி அல்ல.

2.எச்.ஐ.வி தொற்று இல்லாத இருவர் உடலுறவு கொள்வதால் இருவரும் பாதுகாப்பு பெறுகின்றனர். எச்.ஐ.வி தொற்று அபாயமும் இல்லை.

3.தெரியாத புதியவருடன் உடலுறவு கொள்தல் அல்லது பாலுறவு தொழிலாளருடன் உடலுறவு கொள்ளும் ஒவ்வொரு முறையும் ஆணுறை அணிவது ஓரளவுக்கு எச்.ஐ.வி தொற்று மற்றும் பால்வினை நோய்கள் பரவாமல் பாதுகாக்கும்.

**ஊசிகள்**

4.ஒரு முறை பயன்படுத்தக்கூடிய ஊசிகளை பயன்படுத்த வேண்டும். பயன்படுத்திய ஊசிகளை ஸ்டெர்லைஸ் செய்ய வேண்டும்.

5.மருத்துவரால் பரிந்துரைக்காதவற்றை ஊசியால் ஏற்றிக் கொள்ளாதீர்கள்.

6.நீங்கள் எவ்வளவு பாதுகாப்பானவராக தெரிந்தாலும் கூட, நீங்கள் போட்டுக் கொண்ட ஊசியை மற்றவருக்கு அனுமதிக்காதீர்கள்.

**இரத்தம்**

நோயாளிக்கு ஏற்றப்படும்ஈரத்தம் பரிசோதிக் கப்பட்டதுதானா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

**உங்களுக்கு தெரியுமா?**

உலகில் ஒரு மணி நேரத்தில் 600 நபர்கள் எச்.ஐ.வியால் பதிக்கப்படுகிறார்கள்.

உலகில் ஒரு நிமிடத்தில் ஒரு குழந்தை எய்ட்ஸ் மூலம் இறக்கிறது.

கர்பிணிப் பெண்களிடமிருந்து பிறக்கப்போகும் குழந்தைக்கு எச்.ஐ.வி கிருமி பரவுவதைத் தடுக்க முடியும். அதற்கு மருத்துவ வசதி உண்டு.

**எய்ட்ஸ் தெரிந்து கொள்ள வழி:-**

இரத்த பரிசோதனை செய்து கொள்வதன் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

எய்ட்ஸ் நோய்யின் அறிகுறிகள்: எச்.ஐ.வி நுண்கிருமியால் உடல் பலமற்றதாகி விட்ட நிலையில் ஏற்படுகின்ற நோய்யின் பிரதிபலிப்பு தான் எய்ட்ஸ் ஆகும்.

தொடர்ந்து சளி, இரும்பல், காய்ச்சல் வரும்.

தொடர்ந்து வாய்ப்புண் மற்றும் வயிற்றுப்போக்கு இருக்கும்.தோலில் தடிப்பு ஏற்படும்.

எப்பொழுதும் அசதியாகவும், களைப்பாகவும் இருக்கும்.

**நாளடைவில் எடை குறைந்து கொண்டே போகும்.**

எய்ட்ஸ் வந்து விட்டால் மனம் தளராதீர்கள்.

இதற்கும் மருந்துண்டு.

அருகிலுள்ள அரச மருத்துவ மனையினை நாடுங்கள். விசேட சிகிச்சை பிரிவு ஒன்றும் உள்ளது.

தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். அமைதியாக வாழப் பழகிக் கொள்ளுங்கள். மிகுந்த ஓய்வு எடுங்கள். சத்துள்ள கீழ் கண்ட உணவை உண்ணுங்கள்:-

உடலை வளர்க்கும் உணவுகள்: பட்டாணி, மொச்சை, சோயா, வேர்கடலை, எல்லாப் பழங்கள், கீரை, காய்கறிகள், முட்டை, இறைச்சி, மீன், பால். சக்தியளிக்கும் உணவுகளான உருளைக் கிழங்கு, அரிசி, தானியம்,போன்றவற்றை உணவில் சேருங்கள்...

*விழித்திரு தனித்திரு அணிந்திரு!*



# மாற்றத்துக்கான மாற்று வழி என்ன? தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒருங்கிணைவு சாத்தியமா?

'தடம் மாறுகிறதா தமிழ்த் தேசியம்?' எனும் தலைப்பில் தமிழ்க்கட்சிகளையும் சிவில் சமூகத்தினரையும் ஒருங்கிணைத்து 2016 ஆம் ஆண்டு நடத்திய கருத்துப் பகிர்வு கலந்துரையாடலில் பகிரப்பட்ட விடயங்கள் சற்றும் மாற்றமின்றி தற்போதும் நிழ்கின்றன.

தமிழர் அரசியலின் செல்நெறியின் இருப்பைத் தீர்மானிக்கக் கூடிய நிலையில் இருந்து விடுதலைப் புலிகளின் வகிபாகம் 2009க்குப் பின்னர் விடுபட்டது. அன்றிலிருந்து தமிழ் மக்கள் திக்கற்ற திசையில்தான் – தள்ளாடும் மனோ நிலையில்தான் – உள்ளனர்.

15 ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் கூட தமிழ்த் தேசிய மைய இருப்பை தனதாக்கிக் கொள்ளக்கூடிய நிலையில் கட்சிகள் எவையும்ம் இல்லாமல் போனதே துரதிஷ்டமான அரசியல் கள யதார்த்தமாகும்.

தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகள் தங்களின் சுய நலத்தால் முரண்பட்டு உதிரிகள் ஆகிவிட்டன. இந்த உதிரிகளைச் சேர்ந்த பலர் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் காணாமல் போய்விட்டனர். ஜே.வி.பியின் அலையும் வடக்கு மக்களையும், காவு கொண்டு விட்டது. அது வரமா? சுபமா? என்பதை நகரும் காலமே தீர்மானிக்கும்.

ஆனாலும், தமிழ் மக்கள் இனி என்ன செய்யப் போகிறார்களா? யாரை நம்புவது? எந்தக் கட்சிக்குப் பின்னால் போவது? யார் தலைமை? இவர்கள் ஒருங்கிணைவார்களா? அதற்குரிய சாத்தியக்கூறு உண்டா? அல்லது புதிய கட்சி தோற்றம் பெற போகிறதா? ஒருங்கிணைத்தால் யார் தலைமை? எந்தக் கட்சி முதன்மைக் கட்சியாக இருப்பது? பெரியண்ணன் பாத்திரத்தில் எவரும் இல்லை என்பதனால் எவர் சொல்லை எவர் கேட்பார்?

தங்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் துரோகி எனப் பட்டம் சூட்டும் கஜேந்திரகுமார் இனப்பிரச்சனை தீர்வு விடயம் சம்பந்தமாக ஏனைய கட்சிகளோடு உரையாடலாம் என அழைத்திருப்பது மிகவும் வேடிக்கையான. நகைச் சுவையானது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இரண்டு ஆசனங்கள் கிடைத்தவுடன் தலைகால் தெரியாமல் ஆணவத் திமிரில் அதிகாரம் கொண்டு பொய்யும் புரட்டும் ஏமாற்றும் கூறி வந்தவர்கள், இந்த தேர்தலோடு அடங்கி ஒடுங்கி விட்டார்கள். இவர்களுடைய ஏமாற்று கருத்தியலை தமிழ் மக்கள் ரசிக்கவும் இல்லை. இவர்கள் பேசிய கடும் தேசியவாத வார்த்தைகள் எல்லாம் மாயாஜாலம் என்பதைத் தமிழ் மக்கள் புரிந்து விட்டனர். யாழ்ப்பாணத்தைத் தவிர ஏனைய மாவட்டங்களில் சுயேச்சைக் குழுக்கள் பெற்ற வாக்குகளைக் கூடப் பெற முடியாதவர்கள் இப்பொழுது யாருக்கு துரோகி பட்டம் கொடுக்கப் போகிறார்கள்? எல்லா மக்களும் அவர்களுடைய பார்வையில் இப்பொழுது துரோகிகளாகவே தான் தெரியலாம். அரசியலில் எதுவுமே நிலையற்றது என்பதனை உணராத கஜேந்திரகுமார் தரப்பு எப்படி மற்றவர்களோடு இணைந்து பணியாற்ற போகிறது? அரசியல்வாதிகள் மட்டுமல்ல, சிவில் செயற்பாட்டாளர்களுக்கும் துரோகி பட்டமே வழங்கி வந்தார்கள்.

2020 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்திற்கு தமிழ்க் கட்சிகள், சிவில் அமைப்புகள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்கள் யாவற்றையும் ஒருங்கிணைத்து இப்பத்தியாளரால் வவுனியாவில் நடத்தப்பட்ட கூட்டத்திற்கு வருகை தந்திருந்த கஜேந்திரகுமார் தரப்பு மிகக் கேவலமான பொய்யையும் புரட்டையும் கூறி அசிங்கமான வார்த்தைகளை உபயோகித்து ஆணவத் திமிரில் சதிராட்டம் போட்டது.



வி.எஸ்.சிவகரன்

காலம் இன்றைக்கு அவர்களை ஒருங்கிணைவு பற்றி பேச வைத்து விட்டது. கஜேந்திரகுமார் இனியாவது தனது உயரத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். அவருக்கு எடுபிடிகளாக இருக்கின்ற செம்புகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினரும் தாங்கள்தான் ஐந்து கட்சி கூட்டணி, தங்களோடு தான் தமிழரசு கட்சி இணைந்து கொள்ள வேண்டும் என வாய்க்கு வந்தபடி வார்த்தைகளை அள்ளி வீசினார்கள். அவர்கள் எல்லாம் 'லெட்டர் பேட்' கட்சிகள் என்பதனை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. ஜனாதிபதி தேர்தலுக்கு அரியநேத்திரனை சங்கில் களமிறக்கிய பின்னணியில், குறிப்பிட்ட காலத்துக்குள் நாடாளுமன்றத் தேர்தலும் வந்ததால் அந்த சின்னம் ஓரளவுக்கு மக்கள் மத்தியிலே பேசு பொருளாக இருந்தது. அந்தக் காரணத்தால் ஒரு குறிப்பிட்ட அளவு வாக்கை பெற்றுக் கொண்டார்கள். அதுவும், ஜனாதிபதித் தேர்தலில் தாங்களே வகுத்துக் கொண்ட அடிப்படை கோட்பாட்டுக்கு மாறாக சங்கு சின்னத்தை திருடியவர்கள் என்கின்ற விமர்சனமும் இவர்கள் மேல் உண்டு. மக்களின் நிராகரிப்புக்கு அதுவும் ஒரு காரணமாக இருக்கலாம்.

கடந்த காலத்தில் இந்த ஆயதக் குழுக்கள் தமிழ் மக்கள் மத்தியிலே எவ்வாறான துரோகத்தனத்தில் ஈடுபட்டார்கள் என்பதும் மக்களின் நினைவுக்கு வந்திருக்கலாம். தமிழரசு கட்சிக்குள் ஒளிந்திருக்கும் வரைக்கும் தான் தங்களுக்கு அரசியல் ஆயுள் என்பதனை அவர்கள் இப்பொழுதாவது புரிந்து கொள்ள வேண்டும். தமது எதிர்கால அரசியலை மீள் பரிசீலனை செய்யும் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். கூட்டுக்குள் பல்வேறு விதமான குழப்பங்கள் வெளிக்கிளம்பி விட்டன. மூன்று ஆயுத குழுக்களும் வாழ்நாள் தலைவர்களை வைத்திருப்பதனால், ஜனநாயகம் பற்றியோ, கூட்டுணர்வு தொடர்பாகவோ, இளையோர்களின் அரசியல் இருப்புப் பற்றியோ அவர்களுக்கு கிஞ்சித்தும் சிந்தனையும் இருக்காது, உரையாடும் எண்ணமும் தோன்றாது.

பதவி சுகம் மட்டுமே அவர்களின் இலக்காக இருக்கிறது. விக்னேஸ்வரன் அரசியல் மதுபானசாலை அனுமதி பத்திரத்தால் முடிவுக்கு வந்துவிட்டது. மணிவண்ணன் அடுத்த தேர்தல் வரை அந்தக் கட்சியில் நிலைப்பாரா என்பது கேள்விக்குறியே! கட்சி தொண்டர்களையே – உறுப்பினர்களையே – சந்தேகிக்கும் விக்கினேஸ்வரனால் ஆரோக்கியமாக ஓர் அரசியல் கட்சியை முன்னெடுக்க முடியாது. அது யாழ் நகரப் பகுதிக்குள்ளேயே சுருங்கிய

தொடர்ச்சி▼

# மாற்றத்துக்கான மாற்று வழி என்ன? தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒருங்கிணைவு சாத்தியமா?

தொடர்ச்சி▲

ஒரு கட்சியாகவே காணப்படுகிறது.

தமிழரசுக் கட்சியும் தலைமையின்மையால் பல்வேறு விதமான நெருக்கடிகளை எதிர்கொள்கிறது. வடக்கில் வன்னியிலும் யாழிலும் மக்கள் அபிமானம் உள்ளவர்களை களத்தில் வேட்பாளர்களாக்கி இருந்தால் நிலைமை இவ் வளவு மோசமாக இருந்திருக்காது. சுமந்திரன், சிறிதரன் முரண்பாடு இதற்கு அடிப்படையாகியது. அடுத்து வரவுள்ள உட்கட்சி தேர்தலில் வடக்கு கிழக்கு எனும் பிரிவினையை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்பு உண்டு.

கோமாளித்தனமாக இயங்கும் சாவகச்சேரி முன்னாள் வைத்தியருக்கு வாக்களித்த மக்கள் ஏன் சுமந்திரன் போன்றவர்களுக்கு வாக்களிக்கவில்லை எனும் கேள்வியும் உண்டு. அவர் இவ்வளவு காலமும் வாதாடிய வழக்குக ளையும், பேசிய வார்த்தைகளையும் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லையா? அல்லது அவர் பேசிய யதார்த்தத்தை மக்கள் உணர்ந்து கொள்ளவில்லையா? எதுவுமே செய்யாத கோமாளி வைத்தியருக்கு என்ன நம்பிக்கையில் யாழ்ப்பாண மக்கள் வாக்களித்து இருக்கிறார்கள்? சுமந்திரன் கடந்த கால அரசியல் செல்நெறியை சீர்தூக்கி பார்த்து மக்கள் ஏன் தன்னை நிராகரித்தார்கள் என்கின்ற உணர் திறனை மக்களிடமே கேட்டு அறிந்து கொண்டு தனது அரசியல் போக்கை மாற்றிக் கட்டமைக்க வேண்டிய தேவை அவருக்கு இருக்கிறது. இல்லையேல் அரசியலில் இருந்து முற்றாக ஒதுங்கி சட்டத்துறையோடு பயணிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். இதில் எதை தீர்மானிக்க போகிறாரோ தெரிய வில்லை. கட்சி அரசியலில் தொடர போகின்றார் என்றால் முதலில் அவருடைய தீவிர செம்புகளை கை விடாவிட்டால் மீண்டும் அவர் தமிழ் மக்களின் விருப்புக்குரியவராக மாறக்கூடிய ஏதுநிலை தோற்றம் பெறக்கூடிய கள யதார்த் தத்தை கட்டமைக்க முடியாது என்பதனை சுமந்திரன் உணர்ந்து கொள்ள வேண்டும். அரசியலை அறிவால் மட்டும் அணுக முடியாது. உணர்வாலும் உணர வேண்டும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த பல தசாப்தமாக இருந்த அரசியல் கட்சிகளையும் அரசியல் செயற்பாட்டாளர்களையும் தமிழ் மக்கள் நிராகரித்து யார் என்றே தெரியாத ஜே.வி.பியினருக்கு வாக்களித்திருக் கிறார்கள் என்றால் மக்கள் சொல்லாமல் சொல்லும் செய்தி என்ன? தேர்தலில் ஏன் தோற்றோம் அல்லது ஏன் பின்னடைவு ஏற்பட்டது என்பதனை எந்த கட்சியும் இதுவரை கூடி ஆராய்ந்ததாக இல்லை. மக்களைக் குறை சொல்வதை விடுத்து எம்மை ஏன் மக்கள் நிராகரித்தார்கள்? நாம் என்ன தவறு செய்தோம்? அந்தத் தவறுக்கான காரணம் என்ன? அதனை நாங்கள் எப்படி நிவர்த்தி செய்யப் போகிறோம்? – எனர சுய ஆய்வில் இதுவரை எந்த ஓர் அரசியல் கட்சியும் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. மக்களுக்கு நேர்மையாகவும், விசுவாசமாகவும், உண்மையாகவும் செயலாற்றாததன் விளைவுதான் மக்கள் உங்களை நிராகரித்திருக்கிறார்கள் எனும் கசப்பான உண்மையை எவரும் ஏற்றுக் கொண்டவர்களாகத் தெரியவில்லை. அதை உணர்ந்து மாற்றிக் கொள்ளாத வரைக்கும் எந்தக் கட்சிக்கும் அது சார்ந்த நபர்களுக்கும் அரசியல் எதிர்காலம் என்பது பூஜ்ஜியமாகவே இருக்கும்.

அரசியலில் நன்றி, விசுவாசம், அறம் எல்லாம் காணாமல் போய் பல வருடங்கள் ஆகிவிட்டன..

தேர்தலிலே தமிழ்த்தேசியக் கட்சிகள் மிகப்பெரிய பின்னடைவை வடக்கிலே சந்தித்து விட்டன. இவர்களை ஒருங்கிணைத்து, ஓரணியாக, அடுத்த தேர்தலுக்கிடையில் ஏற்படுத்தலாம் என நாங்கள் சில முயற்சிகளை கடந்த கால பட்டறிவின் அடிப்படையில் மேற்கொள்ள முனைந்தோம். எமக்கு அழுத்தம் அதிகமாகியது. மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களையும் மக்கள் விசுவாசிக்காதவர் களையும் மீண்டும் மக்கள் களத்திற்கு ஏன் கொண்டுவர முனைகிறீர்கள்? அரசியல் கணக்கு முடிந்து போனவர்களை மீண்டும் ஏன் அவர்களுக்கு ஓட்சிசன் கொடுக்க முனைகிறீர்கள் என பல தரப்பாலும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒருபோதும் இவர்களை ஐக்கிய படுத்தாதீர்கள். அவர்கள் தமிழ் மக்களுக்கு இதுவரை செய்த நல்ல காரியங்கள் போதும். ஆகவே இவர்கள் எல்லோரும் ஒதுங்கி ஓய்வெடுத்து கொள்ளட்டும் – என மிக முக்கியமான சமூக ஆர்வலர்களும், செயற்பாட்டா ளர்களும், கல்வியலாளர்களும் எமக்கு ஆலோசனை கூறுகிறார்கள்.

புதிய அரசியல் கலாச்சாரத்தை நோக்கி இந்த நாடு நகர்கின்ற சூழலில் வடக்குக் கிழக்கிலும் அவ்வாறான ஒரு அரசியல் பாதை அவசியமாகிறது. இந்த களச் சூழலுக்கு அமைவாக எவ்வாறான அரசியலை முன்னெடுக்க கூடிய வர்களோ அவர்களை ஒருங்கிணைத்து இந்த அரசியலை கொண்டு போக முயலுங்கள் என எம்மை நோக்கி பலர் கேள்வி எழுப்புகிறார்கள். பல ஆண்டுகளுக்கு முன்னரே காணாமல் போக வேண்டியவர்கள் கூட்டமைப்பு எனும் கவசத்தால் இவர்கள் அரசியல் ஆயுள் இதுவரை நீடித்தது. அவர்களை மேலும் நீடிக்க ஒற்றுமை என்கின்ற ஒன்றை வைத்து இந்த அரசியலை அசிங்கப்படுத்த போகிறீர்களா எனக் கேள்வி எழுப்புகிறார்கள்.

அதனால் எமது ஒற்றுமை முயற்சி அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்த முடியாத நிலையில் இருக்கிறது. மாற் றத்திற்கு மாற்று வழி, மாற்று அணியே எனவும் பலர் கூற முற்படுகின்றனர். அந்த மாற்று அணி என்பது யார்,யாரை வைத்து அதனை ஏற்படுத்துவது? அவர்கள் நம்பகத் தன்மைக்குரியவர்களா? அவர்களை மக்கள் ஏற்றுக் கொண்டு வாக்களிப்பார்களா? என்கின்ற கேள்விகள் எழுகின்றன . ஏனெனில் கடந்த காலத்தில் பல கட்சிகள், பல கூட்டுக்கள் உருவாகியும் மக்கள் அற்றை நிராகரித்து விட்டனர். ஆனாலும் தற்பொழுது ஒரு சுயேச்சைக் குழுவுக்குப் பல தசாப்தத்திற்கு பின்னர் வாக்களித்து வெற்றி பெற வைத்த மக்களுக்கு, ஒரு நேர்மையான கள அரசியலை மேற்கொள்ளக்கூடியவர்களை ஏன் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்கின்ற கேள்வியும் இல்லாமல் இல்லை. தலைமை தாங்க கூடிய நிலையில் தமிழரசு கட்சியின் உள்ளக நிலையும் சாதகமாக இல்லை. சுமந்திரன் – சிறிதரன் என இருந்த உட்கட்சி முரண்பாடு சாணக்கியன் – சிறிதரன் என வடக்கு கிழக்கு என முரண்பாடு ஏற்படக்கூடிய ஏதுநிலை உண்டு. அப்படியாயின் யார் தான் தமிழ் மக்களுக்கு தலைமை ஏற்பது என்கின்ற கேள்வி எழுகிறது. தேசமாக திரள்வோம் என சிவில் சமூகம் என்னும் பெயரில் புறப்பட்ட சில பிரமுகர்கள் அரசியல் அரங்கில் தங்களை தக்க வைக்க முடியாமல் அலறி அடித்து ஓடி விட்டனர். இப்பொழுது அவர்களுக்குள்ளும் உள்ளக முரண்பாடு தோன்றி விட்டது. மக்கள் மத்தியில் இருந்த பொதுநிலை அபிப்பிராயத்தையும் கேள்விக்குட்படுத்தி அவர்களும் காலாவதியாகி விட்டனர்.

படித்தவர்கள் எனச் சொல்லப்படுபவர்கள், ஜே.வி.பியின் இனவாத முகத்தை மறந்து விட்டு அவர்களுக்குப் பின்னால் அணிவகுத்து நிற்கின்றனர். அப்படியாயின் யார் படித்தவர்கள் என்கின்ற கேள்வியும் உண்டு. அவர்கள் எதை படித்தார்கள் என்றும் புரியவில்லை. இந்த சிக்கலான அரசியல் சூழலில் உள்ள கட்சிகளுக்குள்ளும் குழப்பம். கூட்டமைக்கக் கூடிய நிலையும் சாதகமாக இல்லை. புதிய கட்சி உருவாகக்கூடிய வாய்ப்புகளே அதிகம் என்றால் அப்படியாயின் அதை செயல்படுத்துவது யார்? தமிழ் மக்கள் அடுத்த தேர்தலிலும் யாருக்கு வாக்களிப்பது? எனும் தடுமாற்றமான மனோநிலையை ஏற்படுத்தாமல் சிந்திப்பதே ஒரே வழி. எல்லா பூனைகளும் ஓடுவதால் எந்தப் பூனைக்கு யார் மணி கட்டுவது.....?

# யாழ்ப்பாணத்தில் பலாலி வீதியைப் புனரமைப்பதாக எண்ணி மணல்தரை, அரசடிப் பகுதிகளை வெள்ளத்தில் மூழ்கடித்தனர்

## வீதி அபிவிருத்தி அதிகார சபை மீது பிரதேசவாசிகள் கடும் சீற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் பலாலி வீதியைப் புனரமைப்பதாக எண்ணி மணல்தரை மற்றும் அரசடிப் பகுதிகளை வெள்ளத்தில் மூழ்கடித்த அபிவிருத்தியையே அதிகாரிகள் மேற்கொண்டனர் எனக் கந்தரமடம் பகுதியில் வாழும் மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் முன்பாக அமைக்கப்பட்ட வீதிப் பணியின்போது வெள்ள வாய்க்காலை எங்கே கொண்டு செல்வது என்ற எந்தவொரு திட்டமிடலும் இன்றி வீதியின் ஒரு பக்கத்தில் வெள்ள வாய்க்கால் அமைத்தனர்.

இராமநாதன் வீதி யாழ்ப்பாணம் மாநகர சபைக்குரிய வீதி என்பதனால் மாநகர சபை இராமநாதன் வீதியை பாதுகாக்க அமைத்த வெள்ள வாய்க்காலை, வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பலாலி வீதியல் பரமேஸ்வராச் சந்திவரை கொண்டு வந்து விட்டனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினரோ பலாலி வீதிப் புனரமைப்பின்போது இதில் சரியான கவனம் செலுத்தாது பரமேஸ்வராச் சந்தியில் இருந்து யாழ். நகருக்குச் செல்லும் திசையில் பலாலி வீதியின் இரு பக்கமும் 2 அடி அகல வாய்க்காலை பழம்வீதி ஆரம்பிக்கும் ஆலடிச் சந்திவரை மட்டும் அமைத்தனர்.

அவ்வாறு ஆலடிச் சந்திவரை இரு திசைகளில் வரும் வெள்ள வாய்க்கால் பலாலி வீதிக்கு குறுக்காக ஊடறுத்து ஒரு வாய்க்காலாக இணைக்கப்பட்டு பழம் வீதி வழியாக அரசடி வீதி வரை செல்லும் வெறும் ஒன்றரை அடி அகல வாய்க்காலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

மாநகர சபைக்கு உரித்தான பழம் வீதியின் ஒன்றரை அசு வாய்க்கால் அப்பிரதேச நீர் ஓடுவதற்கே போதுமானது கிடையாது என்ற நிலையில், இந்த 2 அடி அகலம் கொண்ட இரண்டு வாய்க்கால் ஊடாக – அதாவது 4 அடி அகலதால் பாய்ந்து வரும் – நீர் 2 அடி அகலம் கூட இல்லாத வாய்க்காலினால் ஓட முடியாது மணல்தரை வீதி வழியாக ஊருக்குள் பாய்கின்றது.

இவ்வாறு வெளியேறும் நீரே அதிகளவில் மணல்தரை சாமி அம்மா ஒழுங்கையில் தேங்கி அரசடிப் பகுதியினையும் சூழ்கின்றது.

இந்த நிலை தொடர்பில் பல தடவை கூறியும் வீதி அபிவிருத்தி அதிகார சபை கவனம் செலுத்தவில்லை.

இதன் காரணமாக மணல்தரை, அரசடி, சிவன் புது வீதிப் பகுதிகளில் அதிகளவில் வெள்ளம் தேங்குவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. எனவே உரியவர்கள் இதற்கு சரியான தீர்வாக பலாலி வீதியில் உள்ள இரு வாய்க்கால்களையும் பழம் வீதியுடன் இணைப்பதனை நிறுத்த வேண்டும் அல்லது அடுத்த மாரி மழைக்கு முன்பாக வீதி அதிகார சபையை முற்றுகையிட்டுப் போராட்டம் நடாத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்கின்றனர் அந்தப் பகுதி மக்கள்.





# யாழ். அரச அதிபருடன் சிறீதரன் எம்.பி. பேச்சு

யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபனை யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நேற்றைய தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பில் தற்போதைய வெள்ள அனர்த்த நிலைமைகள் மற்றும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

# மஹரகம விபத்தில் ஒருவர் சாவு

மஹரகம பமுன்வ பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பிலியந்த பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய சுபுன் சுலோகனா அகலங்க் எனவும் இவர் ஜனாதிபதி செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றியவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர புதிய வைத்தியசாலையிலிருந்து பமுன்வ நோக்கி தனது மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது, ஜீப் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து இரண்டு கார்கள், ஓட்டோக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மீது மோதியுள்ளது.

விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிளில் வந்தவர் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் ஜீப் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனொ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்




# திசைகாட்டி நமது தமிழ் மக்களுக்கு பிழையான திசையைக் காட்டுகிறது

## ஐ.தே.க. முதன்மை அமைப்பாளர் டேவிட் நவரட்ணராஜ் தெரிவிப்பு

(பிரபாகரன் டிலக்சன்)

தேசிய மக்கள் சக்தி சார்பிலே யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வைத்தியர், அதிபர் ஆகியோர் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு அமைச்சுப் பதவியோ, பிரதி அமைச்சுப் பதவியோ கொடுக்காது,தேசிய பட்டியல் ஊடாக வந்த ஒருவருக்கு அமைச்சுப் பதவி வழங்குகிறார்கள். இவர்களுடைய ஏமாற்று அரசியலை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முதன்மை அமைப்பாளர் டேவிட் நவரட்ணராஜ் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தில் நேற்றையதினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கொண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள், வெள்ளத்தால் பாதிப்படைந்துள்ளார்கள். அதிலும் குறிப்பாக வடமராட்சி, தென்மராட்சி போன்ற பிரதேசங்களில் அதிகளவு பாதிப்புகள் காணப்படுகின்றன. மக்கள் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சியினால் தேவையான உதவிகளை செய்து வருகின்றோம்.

வெள்ள அனர்த்தின் போது கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரினிடம் பொதுமக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்த போதும் அதனை அவர் நிறைவேற்றவில்லை. தேசிய மக்கள் சக்தியில் யார் போட்டியிடுகின்றார்கள் என்பதை கூட ஆராயாமல் மக்கள் ஒரு மாற்றத்திற்காக கடந்த தேர்தலில் வாக்களித்திருந்தார்கள்.

மாற்றத்திற்காக வாக்களித்த மக்களுக்கு இந்த இடர்காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதுவித உதவிகளையும் செய்யவில்லை. ஒரு இடத்துக்குச் சென்று பார்வையிட்டுவிட்டு புகைப்படம் எடுத்து அரசியல் செய்யாதீர்கள். உங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு நேர்மையாக இருங்கள்.

தேசிய மக்கள் சக்தி சார்பிலே யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வைத்தியர், அதிபர் ஆகியோர் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு அமைச்சுப் பதவியோ, பிரதி அமைச்சுப் பதவியோ கொடுக்கப்படவில்லை. தமிழ் மக்களுடைய வாக்குகளை பெற்றுவிட்டு, தேசிய பட்டியல் ஊடாக வந்த ஒருவருக்கு அமைச்சுப் பதவி வழங்கியுள்ளார்கள். இவர்களுடைய ஏமாற்று அரசியலை தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சொகுசு வாகனங்கள், உலங்குவானூர்திகளை பயன்படுத்த மாட்டோம் என தேசிய மக்கள் சக்தியினர் கூறியிருந்தார்கள். ஆனால் இரு தினங்களுக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உலங்குவானூர்தியில் யாழ்ப்பாணம் வந்து சென்றிருந்தார். மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என விரும்புகின்ற அரசாங்கமாக இருந்தால் அந்த உலங்குவானூர்தி பயணத்திற்கு செலவழித்த காசை கூட மக்களுக்கு நிவாரணமாக வழங்கியிருக்கலாம்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது மக்களை ஏமாற்றுகின்றது. இவர்களுடைய நோக்கம் பிழையானது. நினைவேந்தல்களை அனுஷ்டிக்கலாம் எனக் கூறுகின்ற அதே அரசாங்கம் தலைவர் பிரபாகரனுடைய புகைப்படத்தை சமூக வலைத்தளங்களில் பயன்படுத்தியமைக்காக தமிழ் இளைஞர்களை கைது செய்கின்றது. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியினுடைய ஆட்சி காலத்தில் ஒரு போதும் நினைவேந்தல்களை செய்வதற்கு தடை விதிக்கப்பட்டதில்லை. இவற்றை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

திசை காட்டி மக்களுக்கு பிழையான திசையை காட்டுகின்றது. எதிர்வரும் தேர்தல்களிலாவது மக்கள் உண்மையை உணர்ந்து இவர்களை புறக்கணிக்க வேண்டும்.

வடக்குக்கு விஜயம் மேற்கொண்ட சீனத் தூதுவர் தமிழ் மக்கள் அநுர குமார திசாநாயக்கவிற்கு வாக்களித்தமை சரியான முடிவு என கூறியிருந்தார். அந்தக் கருத்தை நான் முற்றிலும் மறுதலிக்கின்றேன். மாற்றம் என்ற ஒரு மாயை உருவாக்கி பாமரமக்களை ஏமாற்றி பெற்ற வாக்குகளாகவே நான் இதனை கருதுகின்றேன். – என்றார்.





# வெருகல் ஆலயம் வெள்ளத்தில்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலையில் இந்த வாரம் முழுவதும் ஏற்பட்ட அசாதாரணமான கால நிலையினால் வெருகல் ஆறு பெருகி வெருகலம்பதி முருகன் ஆலயமும், அதனை சூழவுள்ள பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இப்படங்கள் நேற்று மாலை 3 மணியளவில் எடுக்கப்பட்டன.

# டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் ஆம் ஆத்மி உடன் கூட்டணி இல்லை

## காங்கிரஸ் உறுதி

டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் ஆம் ஆத்மியுடன் கூட்டணி அமைக்க மாட்டோம் என்று காங்கிரஸ் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

கடந்த மக்களவைத் தேர்தலின்போது காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சிகள் இண்டியா கூட்டணியில் இடம்பெற்றிருந்தன. இந்தச் சூழலில் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற உள்ள டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் இரு கட்சிகளும் எதிரெதிர் அணியில் போட்டியிட முடிவு செய்துள்ளன.

இதுகுறித்து டில்லி காங்கிரஸ் தலைவர் தேவேந்தர் யாதவ் கூறும்போது,

“டில்லியில் 7 மக்களவைத் தொகுதிகள் உள்ளன. கடந்த மக்களவைத் தேர்தலின்போது காங்கிரஸும் ஆம் ஆத்மியும் கூட்டணி அமைத்து போட்டியிட்டன. காங்கிரஸ் 3 தொகுதிகளிலும் ஆம் ஆத்மி 4 தொகுதிகளிலும் வேட்பாளர்களை நிறுத்தின. ஆனால் 7 தொகுதிகளிலும் இண்டியா கூட்டணி தோல்வியை தழுவியது. இது ஒரு பாடமாக அமைந்தது.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடைபெற உள்ள டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 70 தொகுதிகளிலும் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடும். ஆளும் ஆம் ஆத்மி அரசு மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. இது தேர்தலில் எதிரொலிக்கும். வரும் பேரவைத் தேர்தலில் காங்கிரஸுக்கு வெற்றிவாய்ப்பு அதிகமாக இருக்கிறது. காங்கிரஸ் சார்பில் வேட்பாளர்களை தேர்வு செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. முதல்கட்டமாக மாவட்ட அளவில் வேட்பாளர் தேர்வு நடைபெறும். பின்னர் மத்திய குழு வேட்பாளர்களை இறுதி செய்யும்.” – என்றார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் ஆம் ஆத்மி 62 தொகுதிகளில் வெற்றி பெற்றது. பா.ஜ.கவுக்கு 8 இடங்கள் கிடைத்தன. காங்கிரஸுக்கு ஓரிடம்கூட கிடைக்கவில்லை. எதிர்வரும் டில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் ஆம் ஆத்மி, பா.ஜ.க, காங்கிரஸ் இடையே மும்முனை போட்டி ஏற்பட்டிருக்கிறது.

ஆம் ஆத்மி சார்பில் அண்மையில் முதல் வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் 11 வேட்பாளர்கள் இடம் பெற்றுள்ளனர். அவர்களில் 6 பேர், பா.ஜ.க, காங்கிரஸில் இருந்து ஆம் ஆத்மிக்கு மாறியவர்கள் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னை விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் உருவான ஃபெங்கல் புயல் 12 கிலோ மீற்றர் வேகத்தில் நகர்ந்து வருவதாக சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று அறிவித்தது.

ஃபெங்கல் புயல் சென்னைக்கு அருகில் 140 கிலோ மீற்றர் தூரத்தில் மையம் கொண்டுள்ளது.

காரைக்கால் – மாமல்லபுரம் இடையே புயல் கரையைக் கடக்கும் போது மணிக்கு 90 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை கரையைக் கடக்கும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்தது.

இதனால் சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் காற்றுடன் கன மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் புயல் காரணமாகக் கனமழை பெய்து வரும் நிலையில் சென்னை விமான நிலையம் தற்காலிகமான மூடப்படுவதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

# பிரதமர் நரேந்திர மோடி அதானியை பாதுகாக்கிறார்

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு



ஊழல் குற்றச்சாட்டில் சிக்கியுள்ள தொழிலதிபர் அதானியை பிரதமர் நரேந்திர மோடி பாதுகாக்கிறார் என்றும் அதானி விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க மத்திய அரசு அஞ்சுகிறது எனவும் காங்கிரஸ் முக்கிய தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

கேரளாவின் வயநாடு மக்களவைத் தொகுதி இடைத் தேர்தலில் காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி அமோக வெற்றி பெற்றார். அந்த தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்க பிரியங்காவும் அவரது அண்ணன் ராகுல் காந்தியும் சனிக்கிழமை அங்கு சென்றனர். மலப்புரம், கோழிக்கோடு உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற கூட்டங்களில் இருவரும் பங்கேற்றனர். அப்போது ராகுல் காந்தி பேசும்போது,

“லஞ்ச விவகார வழக்கில் தொழிலதிபர் அதானி சிக்கி உள்ளார். இது தொடர்பான வழக்கு அமெரிக்காவில் நடைபெறுகிறது. ஆனால் இந்தியாவில் அவர் மீது இதுவரை வழக்கு பதிவு செய்யப்படவில்லை. பிரதமர் நரேந்திர மோடி, அவரை பாதுகாத்து வருகிறார். அதானி விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வலியுறுத்துகிறோம். ஆனால் மத்திய அரசு, விவாதம் நடத்தகூட அஞ்சுகிறது.

கேரளாவில் காங்கிரஸ் ஆட்சியில் இருந்திருந்தால் வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் கிடைத்திருக்கும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணங்களை கேரள அரசு வழங்க வேண்டும். இதற்காக கேரள அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்.” என்றார்.

பிரியங்கா காந்தி பேசும்போது, “கடந்த 35 ஆண்டுகளாக காங்கிரஸ் தலைவர்களுக்காக பிரச்சாரம் செய்து வருகிறேன். முதல்முறையாக வயநாடு மக்களவைத் தொகுதியில் போட்டியிட்டு எனக்காக பிரச்சாரம் செய்தேன். இடைத்தேர்தலில் என்னை அமோக வெற்றி பெற செய்த வயநாடு மக்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்த 5 ஆண்டுகளுக்குள் வயநாட்டின் அனைத்து வீடுகளுக்கும் வருவேன். உங்களுக்காக அயராது பாடுபடுவேன். உங்கள் உரிமைகளைப் பாதுகாப்பேன். வயநாடு தொகுதி எம்பி என்பதில் மிகுந்த பெருமிதம் கொள்கிறேன்.” – என்றார்.





# நைஜீரியாவில் படகு விபத்து: 27 பேர் பலி; 100 பேர் மாயம்

நைஜீரியாவில் ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27 பேர் பலியாகியுள்ளனர். 100 இற்கும் அதிகமானோர் மாயமாகினர். அவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

வடக்கு நைஜீரியாவின் நைஜர் ஆற்றில் நேற்றுமுன்தினம் இந்தப் படகு விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்துக்கான காரணம் இன்னும் தெரியவில்லை. ஆனால் விபத்து நடந்தபோது படகில் 200 இற்கும் அதிகமானோர் இருந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் அனைவரும் கோகி பகுதியில் இருந்து நைகர் நகரில் உள்ள உணவுச் சந்தைக்குச் செல்லும் போது இந்த விபத்து நடந்துள்ளது.

விபத்து குறித்து தகவலறிந்து வந்த மீட்புக் குழுவினர் நேற்று வரை 27 சடலங்களை மீட்டுள்ளனர். 100 இற்கும் மேற்பட்டோரை காணவில்லை. அவர்களில் பெரும்பாலானோர் பெண்கள். விபத்து நடந்து 12 மணி நேரத்துக்கும் மேல் ஆகியும் கூட மாயமானவர்களில் யாரும் உயிருடன் கிடைக்கவில்லை என்று கோகி மாவட்ட பேரிடர் சேவைகள் துறை செய்தித் தொடர்பாளர் சாண்ட்ரா மூஸா தெரிவித்துள்ளார்.

விபத்துக்கான காரணத்தை அரசுத் தரப்பு உறுதி செய்யாவிட்டாலும், உள்ளூர் ஊடகங்கள் படகில் அதிகளவில் மக்கள் ஏற்றப்பட்டதாலேயே விபத்து நடந்த்து எனத் தெரிவிக்கின்றன.

நைஜீரியாவில் முறையான வீதி வசதிகள் இல்லாத பகுதிகள் அதிகம் இருக்கின்றன. அப்பகுதிகளில் எல்லாம் இன்றளவும் படகு சவாரி தான் ஒரே போக்குவரத்து வசதியாக இருக்கிறது.

இந்நிலையில் அந்தப் படகுகளில் அதிகளவில் மக்களை ஏற்றுவதும் தொடர்கதையாக இருக்கிறது. இதனால் அவ்வப்போது விபத்துகளும் நடக்கின்றன. கடந்த ஒக்டோபர் 3 ஆம் திகதி இடம்பெற்ற படகு விபத்தில் 60 பேர் உயிரிழந்திருந்தனர்.



# சிரியாவின் அலெப்போ நகரை கைப்பற்றினர் கிளர்ச்சியாளர்கள்

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போவின் ஒரு பகுதியை அந்த நாட்டில் உள்ள கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர்.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பொன்று இதனை உறுதிப்படுத்தியுள்ளது. இதன்படி, குறித்த நகரத்தில் 50 சதவீதமான பகுதியைக் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது.

இது சிரியாவில் பல ஆண்டுகளாக இடம்பெறும் அரச எதிர்ப்புத் தாக்குதல்களில் மிகப்பெரிய தாக்குதலாகக் கருதப்படுகிறது. அதேநேரம், குறித்த பகுதியை மீளக் கைப்பற்றுவதற்கு அரச படைகள் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.





# இன்றைய ராசி பலன்கள் - 01.12.2024




இன்றைய தினம் மகிழ்ச்சி நிறைந்த தருணங்களைக் கொண்டதாக இருக்கும். உங்கள் நேர்மையான முயற்சி மூலம் நீங்கள் பல ஆச்சரியங்களைப் புரிவீர்கள். ஆன்மீக காரியங்கள் உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும்.

பணிச்சூழல் சாதகமான பலன்களைக் கொடுக்கும். பணிகளைப் பொறுத்தவரை நீங்கள் திட்டமிட்டபடி நடக்கும். அதனால் நீங்கள் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் மனதில் மிகுந்த திருப்தி காணப்படும். உங்கள் துணையுடன் சாதாரணமான அணுகுமுறை கடைபிடிப்பீர்கள்.

இன்று பணவரவு அதிகமாக காணப்படும்.




இன்று முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகள் மற்றும் செயல் திறன்களை வெளிஉலகிற்குவெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளைப் பெறுவீர்கள். இன்றைய தினம் மிகுந்த தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்களுக்கு சிறப்பான வாய்ப்புகள் காத்திருக்கின் றன. உங்கள் திறமைகள் வெளிப்படும். உங்கள் பணிகள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடனான அணுகுமுறையில் நேர்மையுடன் காணப்படுவீர்கள். இருவரும் ஒன்றாக நேரத்தை நல்ல முறையில் கழிப்பீர்கள்.

இன்று பணவரவு அதிகமாக இருக்கும். இன்று சேமிக்கவும் செய்வீர்கள். இது உங்களுக்கு திருப்தி அளிக்கும்.




இன்று மிகுந்த செயல்பாடுகள் காணப்படாது. சவாலான நேரங்களில் பதட்டப்பட நேரிடும் என்பதால் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும்.உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி பற்றிய கவலை இருக்கும்.

பணிச்சூழலில் ஸ்திரத்தன்மை காணப்படாது. இதனால் உங்கள் பணிகளை திறமையுடன் கையாள முடியாது. சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்காது. மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படையாக கூற இயலாது. உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பதற்கான உற்சாகமான மனநிலை உங்களிடம் காணப்படாது. தேவையற்ற மன உளைச்சல்கள் காரணமாக உங்கள் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது.




இன்று உறுதியான முடிவுகள் கிடைப் பதற்கு உகந்த நாள் அல்ல. நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரிடலாம். அது உங்களுக்கு கவலையைத் தரும். அமைதியுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டியது அவசியம்.

கடுமையான பணிச்சுமை சவாலாக இருக்கும். அத்தகைய சூழ்நிலைகளை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.அதிக வேலை காரணமாக களைத்துப் போவீர்கள்.

உங்கள் துணையுடன் எளிதான அணுகுமுறை தேவை. உங்களுக்கும் உங்கள் துணையாருக்கும் இடையே பிளவு இருப்பதாக நீங்கள் உணர்வீர்கள். எனினும் நெருக்கமான பிணைப்பை வளர்ப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.




இன்று சுமூகமான பலன்கள் கிடைக் கும். நீங்கள் தொடங்கும் காரியங்களில் வெற்றி பெறுவதற்கான அதிர்ஷ்டம் காணப்படுகின்றது. இன்று மிகவும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் பணிகளை குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே முடித்துவிடுவீர்கள்.அதனால் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மை மற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்துவீர்கள். இதனால் மகிழ்ச்சியும் நல்ல புரிந்துணர்வும் ஏற்படும்.பணவளர்ச்சிகாணப்படுகின்றது. பாதுகாப்பான வளமான நிலை மகிழ்ச்சியை அளிக்கும்.

மனதில் நேர்மறை எண்ணங்கள் காணப்படும். உங்களிடம் காணப்படும் உயர்ந்த ஆற்றல் மற்றும் தன்னம்பிக்கை உங்களை ஆரோக்கியமாக வைத் திருக்கும்.




இன்று உற்சாகத்துடன் காணப்படு வீர்கள். உங்கள் செயல்கள் மூலம் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இன்றைய நாளை பயன்படுத்திக்கொள் ளுங்கள். இன்று பிரகாசமான நாள்.

உங்கள் செயல்பாட்டிற்காக மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். செய்வதற்கு அரிதான பணிகளையும் நீங்கள் எளிதில் செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் ஆழ்ந்த ஒட்டுதலை உண்டாக்கிக் கொள்வீர்கள். உங்கள் துணையாரும் நேர்மையுடன் நடந்து கொள்வார்.நல்லிணக்கத்தை வளர்க்கும் வகையில் நீங்கள் உங்கள் துணையுடன் ஒரு முக்கியமான முடிவு எடுப்பீர்கள்.




இன்று உங்கள் செயல்களை முறையாக திட்டமிட்டு செய்வதன் மூலம் நற்பலன்களைக் காணலாம். இன்று தவறான முடிவுகள் எடுப்பதற்கு வாய்ப்புள்ள காரணத்தால் எந்தவொரு முடிவையும் யோசித்து எடுங்கள். பெரியவர்களிடம் ஆலோசனை கேட்டு நடப்பது நல்லது.

பணிநிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்களுக்கு இடப்பட்ட பணிகளை குறித்த நேரத்திற்குள் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் உணர்ச்சிப்பூர்வமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.மகிழ்ச் சியை தக்க வைக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும்.




இன்றைய தினம் உறுதியான பலன் கள் கிடைக்காது.அசாதாரணமான சூழ்நிலையை தவிர்க்க நீங்கள் கவனமுடன் இருக்க வேண்டும். நீங்கள் பேசும் பொழுது உங்கள் வார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள்.

திறமையாக பணியாற்றுவதற்கு தடைகள் காணப்படும். சகபணியாளர்களுடன் சுமூகமான உறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாக இருக்கவும்.

இன்று தவிர்க்கமுடியாத செலவினங்கள் காணப்படுகிறது. எனவே உங்கள் செலவினங்களை கட்டுப்படுத்துவது நல்லது. தேவையற்ற செலவினங்களும் ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.12.2024




இன்று சாதகமான நாளாக அமையும். நீங்கள் உற்சாகமாக இருப்பீர்கள். உங்கள் செயல்களில் எளிதாக வெற்றி அடைவீர்கள்.பெரியவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

பணியில் உங்கள் நிலையில் வளர்ச்சி காணப்படும். வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். அவை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். உங்கள் மேலதிகாரிகளும் உங்களுக்கு சாதகமாக இருப்பார்கள்.

உங்கள் வீட்டில் நடக்கவிருக்கும் ஒரு முக்கியமான விழா தொடர்பாக உங்கள் துணையுடன் பயனுள்ள விவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

இன்று உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

திடமான தேக ஆரோக்கியம் காணப்படும். மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.




இன்று உற்சாகமும் ஆற்றலும் நிறைந்து காணப்படும். எனவே இன்றைய நாளை நீங்கள் சிறப்பாகத் திட்டமிடலாம். உங்கள் திட்டங்களை செயறலாற்றத் தொடங்குவதற்கு இன்று மிகச் சரியான நாள்.

உங்கள் தொழில் சம்பந்தமான பயணம் காணப்படும். உங்கள் தகவல் பரிமாற்றத் திறமை காரணமாக நீங்கள் பாராட்டு பெறுவீர்கள். உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

இன்று உறவு நிலை சாதாரணமாக காணப்படும். உங்கள் துணையுடன் வெளிடங்களுக்குச் சென்று வருவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக உள்ளது. பயனுள்ள சிறு சிறு செலவுகளை மேற்கொள்வீர்கள். அழகுப் பராமரிப்பு, மருந்து வாங்குதல் போன்றவற்றிற்கு செலவு செயவீர்கள்.




இன்று அதிக சிந்தனைவயப்பட்டவர்களாக இருப்பீர்கள். விஷயங்களை சாதாரணமாக எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும். தியானம் மேற் கொள்ளுங்கள். அது உங்களுக்கு நல்ல பலனளிக்கும்.

பணிநிமித்தமான பயணங்கள் காணப்படும்.பணியில் நிறைய சவால்களை சந்திக்க நேரும்.கடுமையான வேலை காரணமாக சோர்ந்து காணப்படுவீர்கள்.உங்கள் துணையுடனான தொடர்பாடலின் பொழுது பிரச்சனைகள் ஏற்படலாம். இதற்கு உங்கள் அகந்தை போக்கு காரணமாக இருக்கலாம். எனவே, அத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

பண அதிர்ஷ்டம் இன்று பிரகாசமாக இல்லை. தொலை தூரப் பிரதேசத்திலிருந்து நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் பணம் கிடைக்க தாமதமாகலாம்.




இன்று மகிழச்சியும் சந்தோஷமும் நிறைந்து காணப்படும். நிலுவையிலுள்ள பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள். இன்று ஆன்மீக அனுபவங்களைக் கண்டு மகிழலாம்.

உங்கள் பணி சிறப்பாக இருக்கும் உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியிடச் சூழல் அமைதிகரமாக இருக்கும் எளிதாகப் பணியாற்ற முடியும்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தைக் கழிப்பீர்கள். அவர்களின் அன்பும் ஆதரவும் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும்.என்றாலும் இனிமையற்ற வார்த்தைகளைப் பேசாதீர்கள்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். உங்கள் குடும்பத்திற்கென பணம் செலவு செய்வீர்கள்.





